சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் காடையாம்பட்டி அரசு மேம்படுத்தப்பட்ட வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று முன்தினம் (17.02.2025) திடீர் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

என்.கௌதமன் தலைமை! வேதாரண்யம் ஒன்றியம் ஆய்க்காரன்புலம் பள்ளியில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்-நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

நாகை, பிப். 19-

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் ஆயக்காரன்புலம்3 ஊராட்சியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். வேதாரண்பம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் உதயம் வே. முருகையன் வரவேற்றனர். வேதாரண்யம் நகர கழக செயலாளர் மா.மீ.புகழேந்தி, ஒன்றிய கழக செயலாளர்கள் வேதாரண்யம் கிழக்கு என்.சதாசிவம், தலைஞாயிறு மகா.குமார், பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ்.ஈ பழனியப்பன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு கொடையாளர்கள் சார்பில் ஆயக்காரன்புலம்3 அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், மருதூர் தெற்கு ஊராட்சியில் உள்ள உயர் நிலைப்பள்ளிக்கு 3 எல்.ஈ.டி. டிவி, இராஜன்கட்டளை உயர்நிலைப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க ஆசிரியருக்கு ஊதியமாக ரூ.66,000க்கான காசோலை, கற்றலில் பின் தங்கிய மாணவர்களுக்கு வினாவிடை கையேடு, தமிழ் இலக்கிய திறனாய்வு தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, தகட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு ஒலிபெருக்கி, தாணிகோட்டகம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கணினி ஆகியவற்றை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கி பேசுகையில் முதலமைச்சர் அவர்கள் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.ஒரே பள்ளியில் பல்வேறு பள்ளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஒரு நிகழ்வை மிகச் சிறப்பான முறையில் இந்த மாவட்ட நிர்வாகம் நடத்திக் கொண்டிருக்கின்றது முதலில் நன்கொடையாளர்கள் உங்கள் அனைவருக்குமே என்னுடைய பள்ளிக் கல்வித்துறை சார்பாக துறை அமைச்சர் என்ற முறையில் என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக நம்முடைய துணை முதலமைச்சர் சொல்லுகின்ற அந்த அறிவுரை என்பது எந்த ஒரு நிகழ்வு நீங்கள் நடத்தினாலும் சரி, அதற்கு காரணமாக எதுவாக அமைந்தாலும் சரி, அது நம்முடைய பொதுமக்களுக்கும், மாணவ செல்வங்களுக்கும் நல்ல விதத்தில் சேர்கின்ற நல்ல திட்டங்களாக அது அமையட்டும் என்கின்ற அந்த அறிவுரையோடு இன்றைக்கு மிகவும் எழுச்சியான முறையிலே பெருமைக்குரிய நிகழ்வில் இந்த நிகழ்வை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கின்றோம் இங்கே அமர்ந்து இருக்கின்ற பத்தாம் வகுப்பு 11ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு சார்ந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள் உங்களை நீங்கள் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் ஏற்கனவே 2, 3 ரிவிஷன் தேர்வை முடிந்து நீங்க இன்று பொதுத்தேர்வுக்கு உங்களை தயார்படுத்தியுள்ளீர்கள். மார்ச் 3 தானே தேர்வு பொறுமையாக படிக்கலாம், முதல் நாள் நைட் படிச்சுக்கலாம் என்று சொல்லிவிட்டு ஒழுங்கா சாப்பிடாம, தூங்காம, உடம்பை கெடுத்துக்க கூடாது. இன்றிலிருந்து சரியாக நேரத்தை ஒதுக்கி அதற்கு தகுந்தாற்போல் படிப்பில் கவனம். செலுத்த வேண்டும் இப்பொழுது ஒன்றும் குறைந்து போகல இப்போது எதாவது சந்தேகம் இருந்தது என்று சொன்னால் உடனே ஆசிரியரிடத்தில் அந்த சந்தேகத்தை தீர்த்து வைக்கின்ற அளவிற்கு நீங்கள் அதைக் கேட்க வேண்டும். இப்ப போய் கேட்டா டீச்சர் திட்டுவாங்களே வெட்கதயக்கமா இருக்குன்னு இருக்க கூடாது. இது உங்களுக்கான எதிர்காலம், சந்தேகத்தை தீர்த்து வைக்கதற்காகத்தான் ஆசிரியர்கள் பள்ளிக்கு வருகிறார்கள்.

குறிப்பாக பெற்றவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு நம்மை படிக்க வைக்கிறதுக்காக பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார்கள். பெற்றவர்கள் படுகின்ற கஷ்டத்தை கொஞ்சம் பாருங்க, மாணவ, மாணவிகள் ஆசிரியர் கற்பித்ததை. முழுமையாக உள்வாங்கிக் கொண்டு படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் எதில் ஸ்ட்ராங்கா இருக்கிறார்கள், எதில் வீக்கா இருகிறார்கள் என்று தெரிஞ்சுக்கிட்டு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு ஆசிரியர் பெருமக்கள் இருக்கின்றது. நல்ல அறிஞர்களை, நல்ல மருத்து வர்களை, நல்ல பொறியாளர்கள் ஏன் நல்ல ஆசிரியர்களை, நல்ல பேராசிரியர் உருவாக்க ஆசிரியர்களான உங்களால் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை பள்ளிக் கல்வித் துறை அமைச்சரான எனக்கு உண்டு.

இங்கு வருகை தந்திருக்கின்ற மாணவ, மாணவிகள் முழுமையாக உங்களுடைய கவனத்தை படிப்பில் செலுத்துங்கள் அதனால் தான் தமிழ்நாட்டு முதலமைச்சர்

67க்கும் மேற்பட்டிருக்கின்ற திட்டங்களை இந்த 4 ஆண்டுகளில் கொண்டு வந்திருக்கிறார் முதலமைச்சர் உங்களிடம் வைக்கின்ற வேண்டுகோள் ஒன்றே, ஒன்றுதான் பிள்ளைகளே நீங்கள் படியுங்கள் அந்த படிப்பிற்கு தடையாக எது வந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லக்கூடிய முதலமைச்சர் பெற்றிருக்கின்றோம். அந்தக் கனவு மெய்ப்பட வேண்டும் என்று சொன்னால் தமிழ்நாடு அறிவார்ந்த ஒரு சமுதாயமாக உருவாக வேண்டும் என்று சொன்னால் கல்வி சிறந்த தமிழ்நாடு என்கின்றதை நான் நிரூபிக்க வேண்டும். மாணவ, மாணவிகளே நீங்கள் முழுமையாக உங்களுடைய கவனத்தை படிப்பில் செலுத்துங்கள் என்று சொல்லி உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்து குறிப்பாக நன்கொடையாளர்கள் உங்களுக்கும் உங்களுடைய நல்ல உள்ளத்திற்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

10,11,12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அரசு பொது தேர்வு நடைபெறவுள்ளதால் மாணவ, மாணவியர்கள் படிப்பில் கவனம் செலுத்தி திட்டமிட்டு படிக்க வேண்டும்

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் சோ.ரவிச்சந்திரன்

மாவட்டக் கழக துணைச் செயலாளர் சோ.ரவிச்சந்திரன் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.மா.கா.சே.சுபாஷினி, வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.திருமால், வேதாரண்யம் நகரமன்ற தலைவர் மா.மீ.புகழேந்தி, வேதாரண்யம் நகராட்சி ஆணையர் திருமதி.டி. சித்ரா சோனியா, சி.க.சு அரசு மேல்நிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்ட கொடையாளர்கள் வர்த்தக சங்க தலைவர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்க துணைத் தலைவர் எஸ்.எஸ்.தென்னரசு, தொழிலதிபர் சுல்தானுல் ஆரிபின், ஆர்.எஸ்.மணி குழுமம் ஆர்.எஸ்.அருண், எஸ்.கே.எம்.எஸ்.அறக்கட்டளை நிறுவனர் எஸ்.கே.எம்.எஸ்.மாரியப்பன், அரசு பள்ளிகளுக்கு வழங்கிய கொடையாளர்கள் ஆத்ம திட்ட மாவட்ட ஆலோசனைகுழு உறுப்பினர் உதயம் வே. முருகையன், எல்.எஸ்.இ. பழனியப்பன், தலைமையாசிரியர்கள் சி.அன்பழகன், திருமதி.ஜே.ஸ்டெல்லா ஜேனட், ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கோதண்ட ராமசாமி கோயில் திருத்தேர் சீரமைக்கும் பணி மற்றும்திருத்தேர் நிறுத்தும் கொட்டகை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியை தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தொடக்கிவைத்தார். உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், நகர செயலாளர் இரா.முருகேசன் உதவி கோட்டப் பொறியாளர் வைத்தியநாதன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளராக (பெருந்துறை, பவானி) அறிவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் பெருந்துறையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், மாநில நிர்வாகிகள் எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மேயர் நாகரத்தினம், பவானி நகர கழக செயலாளர் ப.சீ.நாகராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.சாமி, பெரியசாமி. கே.பி.துரைராஜ் பவானி கே.எ.சேகர், சரவணன், ஈரோடு இளைய கோபால், பவானி கண்ணன், கே.சரவணன், எஸ்.ஏ.அன்பழகன், அகரம் மூர்த்தி உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி அரசு மேம்படுத்தப்பட்ட

வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு!

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மேற்கொண்டார்!

சேலம், பிப்.19-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் காடையாம்பட்டி அரசு மேம்படுத்தப்பட்ட வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று முன்தினம் (17.02.2025) திடீர் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்கள். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர். இந்த ஆய்விற்குப்பின் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறைக்கென பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, கலைஞரின் வருமுன் காப்போம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில் இன்றைய தினம் காடையாம்பட்டியில் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் அரசு மேம்படுத்தப்பட்ட வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக இந்த ஆய்வின்போது உள் நோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, மருந்து மாத்திரைகள் வழங்கும் பிரிவு, கர்ப்பிணித்தாய்மார்கள் சிகிச்சைக்கென தனிப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள் மற்றும் தேவைகள் குறித்து பொதுமக்களிடம் கேட்டறியப்பட்டது.

அதேபோன்று, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் வருகைப்பதிவேடு, நோயாளிகளின் வருகை குறித்தும் கேட்டறிந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், மருந்து, மாத்திரைகளின் இருப்பு குறித்தும் விரிவாக கேட்டறியப்பட்டதுடன் தேவையான மருந்து, மாத்திரைகள் அனைத்தும் போதுமான அளவு இருப்பில் உள்ளதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்கென வருகை தருபவர்களின் வசதிக்கேற்ப சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியை மேலும் இரண்டு இடங்களில் அமைத்திட மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில்

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு!

சென்னை, பிப். 19-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (17.02.2025) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு 1 மணி நேரத்திற்கு மேலாக முழுமையாக பார்வையிட்டு அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களிடம் நலம் விசாரித்து, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார் மற்றும் சிகிச்சை பெறுபவர்கள் உடன் இருக்கும் உறவினர்களிடம் மருத்துவமனை வசதிகள் குறித்து கேட்டறிந்து, குறைகளை நிவர்த்தி செய்ய உத்தரவிட்டார்.

இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள ICCU - தீவிர இருதய நோய் சிகிச்சை பிரிவு, IMCU - தீவிர மருத்துவ சிகிச்சை பிரிவு, பெண்கள் மற்றும் ஆண்கள் மருத்துவ சிகிச்சை பிரிவு TAEI Ward - அவசர சிகிச்சை பிரிவு, கலைஞர் மாரத்தான் மற்றும் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் புற்றுநோய்க்கான பிரத்யேக கட்டடம் கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் உடனிருப்பவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு மருத்துவ சேவையை பாராட்டி மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில் சென்னை இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஆயிஷா, நிலைய மருத்துவ அலுவலர் மரு.சாய்வித்யா மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களாலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களாலும் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டதையடுத்து திருப்பூரில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன்முதலில் சந்தித்த இடமான திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன் உள்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.